# அருணகிரிநாதர் வகுத்த வாழ்வியல் உண்மைகள்

வெ. சித்ராதேவி,
பகுதிநேர முனைவர்பட்ட ஆய்வாளர் (தமிழ்),
ஸ்ரீபராசக்தி மகளிர் கல்லூரி,
குற்றாலம்.

28

**ஆய்‘வு நோக்கம் :**

தமிழிலக்கியங்கள் ‘பொருள்’ - இலக்கணத்திற்கு வடிவங்களாகத் திகழ்கின்றன. அகம், புறம் என்ற வாழ்வியலில் கடைபிடிக்கும் நெறிகள், புறந்தள்ள வேண்டியவை இவற்றைக் கூறுவது ஆய்வின் நோக்கமாக அமைகிறது.

**ஆய்வுச் சுருக்கம் :**

அருணகிரிநாதர் தன் இளமையில் தவறானவழியில் சென்று மீண்டுவந்த அனுபவங்களைத் திரட்டித்தரும் நூல் திருப்புகழ். அந்நூலில் அறச்செய்திகள், மனித வாழ்வியல் இறையியலோடு ஒன்றிணையும்போது இன்புற்று வாழலாம் என்னும் கருத்து ஆய்வுச் சுருக்கமாகும்.

**திறவுச் சொற்கள் :**

தமிழ் இலக்கியங்கள் – பக்தி இலக்கியம் –திருப்புகழ் - அறஞ்செய்க – இல்வாழ்க்கை – அறிவின் இருப்பிடம் அன்பு – நல் ஒழுக்கம் – பிறப்பும் இறப்பும் – ஞானநெறி – பிறவிப்பெருங்கடல்.

**முன்னுரை :**

தமிழிலக்கியங்களின் எண்ணிக்கை அளவிடற்கரியது. அவ்விலக்கிங்களின் பாடுபொருளும் அவை எடுத்துரைக்கும் கருத்துக்களும் இவ்வளவு என்று வரையறுக்கப்படாதது. எனவே தான், ஒவ்வொரு இலக்கியத்தையும் பல்வேறுபட்ட கண்ணோட்டங்களில் ஆய்வுலகம் ஆய்ந்து வருகின்றது.

இலக்கிய வகைகளுள் சங்க இலக்கியம், நீதி இலக்கியம், பக்தி இலக்கியம், சிற்றிலக்கியம், காப்பியங்கள் எனப்பல்வேறு இலக்கியங்கள் தோன்றியுள்ளன. பண்டையதமிழரின் வாழ்வியல் அகம், புறம் பற்றிய வாழ்வினை மையமிட்டு எழுந்தனவாகும், அகம், புறம் சார்ந்த நூல்களும் உள்ளன. இவற்றுள் வாழ்வியல் அறங்களைப் பற்றி விரித்துரைப்பதில் நீதி இலக்கியங்கள் என்று கூறப்பெறும் பதினெண்கீழ்க்கணக்கு நூல்கள் முதன்மை பெறுகின்றன. இவ்வறக்கருத்துகள் மற்றைய இலக்கியங்களிலும் காணப்படுகின்றன. பக்தி இலக்கியங்கள் இறைவனைப் போற்றி எழுந்தவை. உலக உயிர்கள் ஞானநெறியை அடைவதற்கான வழிகளும் இதில் எடுத்துக் கூறப்பட்டுள்ளன.

**அருணகிரிநாதர் :**

அருணகிரிநாதர் இளமையின் பிடியில் சிக்குண்டு பொதுமாதர்களுடன் தவறான வழியில் சென்றார். அதனால் ஏற்படும் துன்பங்களைத் தாளாமல் வாழ்க்கையை முடித்துக் கொள்ள அருணகிரிமலை மேல்நின்று உயிர்துறக்க எண்ணினார். அப்போது முருகனால் ஆட்கொள்ளப்பட்டு நல்வழியில் சென்று ஞானமார்க்கம் அடைந்தவர் அருணகிரிநாதர். அவர் பாடிய நூல்கள் திருப்புகழ்,

KAMARAJ COLLEGE
Accredited with A+ Grade by NAAC
இந்து சமுதாய நலச்சங்கங்களால் 1966–ல் தொடங்கப்பட்ட கல்லூரி
(Affiliated to Manonmaniam Sundaranar University, Tirunelveli)
THOOTHUKUDI - 628003

கந்தர் அலங்காரம், கந்தர் அநுபூதி, திருவகுப்பு, கந்தர் அந்தாதி, வேல் விருத்தம், மயில் விருத்தம் என்பன. இவற்றுள் திருப்புகழ் – இசையுடன் கூடிய முருகனைப் போற்றிப் பரவும் தெய்வத்தமிழ் என்று கூறலாம். இத்திருப்புகழில் மனிதன் செம்மையாக வாழ்க்கையை வாழத் தேவையான வழிமுறைகளைத் தம் அனுபவத்தில் வாயிலாக எடுத்துக்காட்டுகிறார் அருணகிரிநாதர்.

**திருப்புகழ் பாடுபொருள் :**

திருப்புகழில் அருணகிரியார் தம் அனுபவத்தால் உயிர்களுக்கு ஞானநெறியை வகுத்துக் காட்டியுள்ளார். பொதுமகளிரால் தான்அனுபவித்த துன்பம் பொதுமகளிரின்செயல் நயவஞ்சகப் பேச்சு, மாயமான வாழ்க்கை இவற்றினை விரித்துப் பாடல் முழுவதும் கூறியிருக்கிறார். பதினாறாயிரம் பாடல்களில் இன்று ஆயிரத்து இருநூறு பாடல்களே கிடைத்துள்ளன. இவற்றுள் பாடல்தோறும் பொதுமகளிரின் செயலைச் சாடுதலைக் காணலாம். இது அருணகிரிநாதரின் காமம் பற்றிய மிகுசிந்தனையை விதைத்தலாகப் பலர் கூறுவதுண்டு. அவர் வாழ்ந்த காலத்தில் பொதுமகளிரை நாடி இளைஞர்கள் இன்னலுறக் கூடாது என்பதற்காகவே பாடியுள்ளார் என்பதை அவர் பாடல்களின் முழுக்கருத்தால் புலனாகும். இவை மட்டுமல்லாது, அறம், நன்றி மறவாமை, துன்பத்திலிருந்து விடுபடும் வழிகள் போன்றவற்றையும் கூறியுள்ளார்.

**அறனெனப்பட்டதே இல்வாழ்க்கை :**

ஒரு கருத்தைத் திரும்பத்திரும்ப எடுத்துரைப்பதன் நோக்கம் அச்செயலைச் செயல்படுத்துவதன் ஆக்கமேயாகும்.

‘அறனெனப்பட்டதே இல்வாழ்க்கை’ என்கிறார் வள்ளுவர் . ஈதல் அறத்தை பெரிதும் வலியுறுத்தியுள்ளார் அருணகிரிநாதர். மேலும், தினை அளவினதாக இருந்தாலும் பங்கிட்டு உண்ண வேண்டும். பசியுற்றவர்களுக்கு பகிர்ந்து கொடுக்க இசையுங்கள். ஒரு பிடி எனினும் கொடுப்பதை மறக்காதீர்கள். இல்லை என்று சொல்ல நாணம் கொள்ளுங்கள். உள்ளது சிறிதளவாக இருப்பினும் எள் அளவு தானமிடுங்கள் என்று கூறுகிறார். கொடுப்பதில் அளவு முக்கியமில்லை உதவ வேண்டும் என்ற எண்ணமே முன் வந்து நிற்க வேண்டும்.

வறுமையுற்றவனும் தனக்குக் கிடைத்த உணவில் நொய்யிற் பிளவளவேனும், தவிடளவேனும் தானமிட வேண்டுமென்று வலியுறுத்தியுள்ளார். இதனால் அறம் செய்தலே, இறைவனை அடைவதற்கான வழி; பாவங்கள் தொலைவதற்கான நெறி என்று கூறுகிறார்.

“தினையளவு பங்கிட் டுண்கை” 1

“பசியுற் றவருக் கமுதைப் பகிர்தற் கிசையாதே” 2

“ இல்லையென நாணி உள்ளதின் மறாமல்
எள்ளி னள வேனும் பகிராரை ” 33

“தவிடி னார்ப்பத மெனினு மேற்பவர் தாழாதீயேன்” 4

“நொய்யிற் பிளவளவேனும் பகிர்மின்கள்” 5

**அறிவின் இருப்பிடம் அன்பு :**

அறிவுள்ளவர்களாலே எல்லா உயிர்களிடத்தும் அன்புணர்வுடன் இருக்க முடியும். ‘அன்பு’ எனும் அறநெறியே இல்வாழ்க்கையை இனிதாகக் கடக்க வேண்டுவதாகும். ‘குற்றம் பார்க்கில் சுற்றமில்லை’ என்று கூறுவது போல உலகில் குற்றங்களே இல்லாத மனிதர்களைக் காண்பது அரிது. வள்ளுவர் கூறும் நெறியில் அவர் செய்த ஒன்று இரண்டு நல்லறங்களை நினைவில் கொண்டு ‘அன்பு’ எனும் அறத்தைப் பேணுதல் வேண்டும் என்கிறார் அருணகிரிநாதர்.

“உயர்கருணை புரிய மின்பக் கடல் மூழ்கி
உனையெனது ளறியு மன்பைத் தருவாயே” 6

அன்பினை வளர்க்கும் வழியை நினையாது வாழ்க்கையில் உழன்று கொண்டு இருக்கின்றேனே என்று தன்னையே நிந்தனை செய்து பாடுகின்றார்.

“வழியடிமை யன்பு கூருமது – சிந்தியேனோ” 7

‘அன்பு’ - தீயோர் மேல் செல்லக் கூடாது . அது உற்றோர்க்கும் தீமையே தரும் என்கிறார்.

‘அன்பு’ ஆளப்படும் களையப்படும் இடங்களை வகுத்துக் காட்டுகிறார்.

“ உழல் மாதர்
கூரா வன்பிற் சோரா நின்றக்
கோயா நின்றுட் குலையாதே” 8

பொதுமகளிரிடம் அன்புகாட்டி சோர்ந்து நிற்கும், ‘என்னைப் போல, இளைஞர்களே! உங்கள் வாழ் நாளை வீணாக்காதீர்!’ என்று அறிவுறுத்துகிறார்.

**நல் ஒழுக்கம் எனும் வித்து :**

நல் ஒழுக்கம் இல்வாழ்க்கைக்கு ஓர் இனிய வித்து. நல்ஒழுக்கம் இல்லாததால், “ மாதர்களால் விரும்பும் கேடனை, மூடனை, நல்லொழுக்கத்தை விரும்பாத இழிந்தோனை வீணனை, படிப்பு இல்லாத முழு ஏழையை, மடையனை, விட்டு நீங்காத நீண்ட பெருவினை மூடியுள்ள நோயும் பிணியும் கொண்டவனை உண்மை இல்லாதவனை இகழ்ந்து ஒதுக்காமல்” 9 அருள்புரிவாய் என இறைவனை இறைஞ்சுகிறார் அருணகிரிநாதர்.

நல் ஒழுக்கம் இல்லாத வாழ்நாள் வீழ்நாள் என்கிறார். நாம் பிறப்பு எடுத்து அதன் அனுபவத்தை மகிழ்வுற அனுபவிப்பதலிலும் ஓர் அறம் வேண்டும் என்கிறார்.

மேற்சொன்ன செய்கையெல்லாம் ஒழித்து அன்புடனே ஆசாரமான பூஜையைச் செய்து பிழைத்திடவும் என் வாழ்நாள் வீணான நாளாகப் போகாதபடியும் அருள்புரிவாயாக என்று வேண்டுகிறார்.

“அன்புட னாசார பூசை செய்
துய்ந்திட வீணாள்ப டாதருள் புரிவாயே” 10

நல்ஒழக்கத்தை நீக்கும் பொருள்களாக பணம், ஆசைகள் இவற்றைக் குறிப்பிடுகிறார்.

“சீல மறையும் பணத்திலா” 11

**பிறப்பும் இறப்பும் :**

குழந்தைப்பருவம், இளமைப் பருவம், முதுமைப் பருவம் என மனிதனின் வாழ்நாளை மூன்றாகப் பிரித்துக் கூறியுள்ளார் அருணகிரிநாதர். அவர் கூறும் அறவுரைகள் எங்கேயோ கேள்விப்பட்டதையும் படித்ததையும் கூறவில்லை. தான் தன் அனுபத்தால் பெற்ற இன்ப – துன்பங்களை நிரல் நிறையாகக் கொண்டு அதற்கு வழி கூறுகிறார்.

“அவனிதனிலே பிறந்து மதலைஎன வே தவழ்ந்து
அழகு பெற வே நடந்து - இளையோனாய்
அருமழலை யே மிகுந்து குதலைமொழி யே புகன்று
அதிவிதமதாய் வளர்ந்து – பதினாறாய்
சிவகலைகள் ஆகமங்கள் மிகவும்மறை ஓதும் - அன்பர்
திருவடிகளே நினைந்து – துதியாமல்;
தெரிவையர்கள் ஆசை மிஞ்சி வெகுகவலையாய் உழன்று
திரியும் அடியேனை உன்றன் - அடிசேராய்” 12

குழந்தை மழலைமொழி பேசக் கற்றுக் கொள்கிறது. இளைஞனாக வளர்ந்து சிவபுராணங்கள், ஆகமங்கள், மிகவும் சிறந்த வேதங்கள் இவைகளை ஓதிக் கொண்டிருக்கும் அன்பர்களின் திருவடிகளை எண்ணிப் போற்றுவது வாலிபர்களின் கடமையாகும். இத்தகைய நல்ல ஒழுக்க நெறியிலே நிற்கும் வாலிபர்களால் மனித சமூகம் நன்மையடையும். ஆனால் இக்கடமைகளை நான் செய்யவில்லை என்று அருணகிரிநாதர் கூறி, பெண்ணாசை மிகுந்தேன்; ஆசைகொண்டேன்; பல்வேறு துன்பங்களை அடைந்தேன்; இங்ஙனம் குழந்தை மற்றும் குமரப்பருவத்தின் கூறுகளையும் அதனால் ஏற்படும் துன்பங்களையும் பல்வேறு இடங்களில் குறித்துள்ளார்.

“தொண்டு கிழவன் இவன் ஆர் எனக் ” 13

யாக்கை நிலையில்லாதது (பா. எண். 761) பற்றியும் நோய், வாதம், பித்தம் (பா.எண் 193) போன்றவை அணுகாமல் காக்க வேண்டுகிறார்.

**நன்றி மறவாப் பண்பு :**

நல் ஒழுக்கம் இலாதவன், பூசை செய்து வழிபடாதவன் எனத் தன்னைக் கூறி அத்தகைய தூய நெஞ்சம் இல்லாதவனாகிய என்னை இறைவன் ஆட்கொண்டு நல்வழியில் செலுத்திய நன்றியைப் பல பாடல்களில் பதிவு செய்துள்ளார்.

“ திருப்புகழ் நித்தம் பாடுமன்பது செய்ப்பதி யிற்றந் தவனீயே” 14

**பஞ்சமாபாதகங்கள்:**

கொலை, களவு, பொய், கள்ளூண், குருநிந்தை என்ற ஐவகை கொடுஞ்செயல்களையும் செய்து வந்த அசுரர்களின் கொடிய சேனைகளின் வலிமை தொலைய தேவர்குல சேனைக்குத் தலைவர் முருகன் எனப் போற்றுகிறார் அருணகிரிநாதர்.

உயிர் பிறந்து எண்ணங்கள், செய்கைகள், மயக்கங்கள், எத்தனை வெறுப்பு, எத்தனை மகிழ்ச்சி,

எத்தனை வலிமை, எத்தனை நோய் இவ்வுடம்பினுள் இத்தனையும் புகுந்துவர பிறப்பு இறப்பு எடுத்து உலகில் வாட்டமுற்று வாழும் என்னைக் காப்பாற்று என்று உலகவுயிர் கடவுள் பிறப்பெடுத்ததன் நோக்கம் பிற உயிர்களை வாழ்விக்க; இன்ப வாழ்வில் ஞானம் பெற; ஞானம் பெற்றால் பிறவிப்பெருங்கடலை இறைவன் அடியால் நீந்தலாம் என்று கூறுகிறார்.

**முடிவுரை :**

அருணகிரிநாத திருப்புகழில் பக்தித் திறத்தை மட்டுமின்றி அறத்தையும் நல் ஒழுக்கத்தையும் இல்லறவியலையும் எடுத்துக் கூறியுள்ளார். உழன்று தவிப்போருக்கு ஒரு வழியையும் அதிலிருந்து மீண்டு வருவதன் திட்பத்தையும் எடுத்துரைக்கின்றார். தன் வாழ்க்கையையே அனுபவமாக்கி, எடுத்துக்காட்டி வாழும் வழியை நெறிப்படுத்தியுள்ளார். இவ்வாய்வு சமய உலகில் இன்னலுறும் உயிர்களின் துயர்நீக்கி அன்பு, அமைதி நிலைபெற இவர்தம் பாடல்கள் வழிகாட்டியாய் அமைகின்றன.

**மேற்கோள்கள் :**

1. திருப்புகழ் மூலமும் உரையும், வ.சு.செங்கல்வராயபிள்ளை, பா.17
2. மேலது, பா.249
3. மேலது, பா.666
4. மேலது,பா.1062
5. கந்தர் அலங்காரம், அருணகிரிநாதர், பா.18
6. திருப்புகழ் மூலமும் உரையும், வ.சு.செங்கல்வராயபிள்ளை, பா.51
7. மேலது, பா.55
8. மேலது, பா.57
9. மேலது, பக்.98
10. மேலது, பா.66
11. மேலது, பா.216
12. மேலது, பா.138
13. மேலது, பா.27
14. மேலது.பா.105

**துணை நூற்பட்டியல் :**

1. திருப்புகழ் மூலமும் உரையும் – தணிகைமணி வ.சு. செங்கல்வராய பிள்ளை - சாரதா பதிப்பகம், சென்னை – 14
2. அருணகிரியார் குருபரர் அறிவுரைகள், ஶ்ரீஅருணகிரியார்- சாமி சிதம்பரனார் - ராமையா பதிப்பகம், சென்னை – 14
3. கந்தர் அலங்காரம் மூலமும் உரையும் – கவிஞர் பத்மதேவன் - ஶ்ரீஇந்து

பப்ளிகேஷன் சென்னை – 35

4. அருணகிரிநாதர் வரலாறும் நூலாராய்ச்சியும்- வ.சு. செங்கல்வராய பிள்ளை – மங்கை வெளியீடு சென்னை - 18